Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 4 2025

புதன்கிழமை 04, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 53 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## மனைவியின் தலையுடன் சரணடைந்த கணவன்

ஸ.அகரன்

தனது மனைவியைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் கணவன், மனைவியின் தலையுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ள சம்பவம் வவுனியா புளியங்குளம் பகுதியில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் கையில் இருந்த பொலித்தீன் பையினுள் தனது மனைவியின் தலை இருப்பதாகவும் அவரை கொலை செய்து காட்டுப்பகுதியில் உடலை விட்டு வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த பொலிஸார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோ.சுகிர்தரன் என்ற குறித்த நபரை உடனடியாக கைது செய்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் சின்னபூவரசன்குளத்தில் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அனந்தர்புளியங்குளம் நொச்சிகுளத்தை சேர்ந்த ஆசிரியையான சுகிர்தரன் சுவர்ணலதா வயது 32 என்ற பெண்ணே மரணமடைந்துள்ளார். அவர் கர்ப்பிணிப் பெண் என தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## சிவப்பு சீனி ஏற்றுமதி செய்ய பேச்சு

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனியை பல்வேறு வகையான கரிம சீனியாக ஏற்றுமதி செய்வது குறித்து சீனா, ஈரான் மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளதாக தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

உலக சந்தையில் கரிம சீனிக்கு அதிக தேவை இருப்பதாகவும், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனியில் கரிம சதவீதம் அதிகமாக இருப்பதாகவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பாராட்டியது அவுஸ்திரேலிய

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு அவுஸ்திரேலிய புதிய அரசாங்கம் பாராட்டியது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்திரேலிய பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸுக்கும் (Richard Marles) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையிலான கலந்துரையாடல் செவ்வாய்கிழமை (03) அன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



## உயிர்மாய்க்க முயன்ற மாணவி: நால்வர் கைது

குருநாகல், குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாகத் தன்னுயிரை திங்கட்கிழமை (02) அன்று மாய்த்துக்கொள்ள முயன்ற சம்பவம் தொடர்பில், அந்த கல்லூரியில் கற்கும் நான்கு மாணவர்கள் குளியாப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லூரிக்கு அருகில் உள்ள வாவியில் அந்த மாணவி குதித்துள்ளார். பிரதேச வாசிகள் சிலர் இணைந்து மாணவியைக் காப்பாற்றி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த மாணவி, கல்லூரியில் இடம்பெறும் பகிடிவதை காரணமாகத் தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று வாவியில் குதித்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் நான்கு மாணவர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

### மின்சாரக் கட்டணம்

# 18%ஆல் அதிகரிக்குமா?

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் அடுத்த கட்ட தவணையைப் பெற மின்சாரக் கட்டணத்தை 18 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. இது உண்மையா என்பதை தெரியப்படுத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (03) கேட்டார்.

மேலும், மின்சாரக் கட்டணம் 18%ஆல் அதிகரிக்குமா என்பதையும், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் அடுத்த தவணை கிடைக்கப்பெறும் திகதி யாது என்பதையும் தெரியப்படுத்துமாறு கோரினார்.

இதற்கு பதிலளித்த நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, மின்சார கட்டணம் தொடர்பில் அரசாங்கம் தீர்மானிப்பதில்லை. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றார்.

அரசாங்கம் என்றவகையில், உற்பத்தி செலவுக்கு அறவிட்டுக்கொள்ளும் குறித்த முறையின் ஊடாக அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படும் சேவைகளுக்காக நியாயமான விலைக்கு மக்களுக்கு அதனை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அதன் பிரகாரம் தரவுகள் மற்றும் அறிக்கைகளை ஆராய்ந்து அதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

மின்சார கட்டணம் தொடர்பில் அரசாங்கம் குறித்த ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கும் தரவுகள் மற்றும் அறிக்கைகளை ஆராய்ந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார கட்டணத்தை அதிகரிப்பதா? எத்தனை சதவீதம் அதிகரிப்பது என தீர்மானிக்கும். அதனால் அரசாங்கம் எத்தனை சதவீதம் அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவிப்பதில்லை என்றார்.





## கொடியேற்றம்

கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழா, கொடியேற்றத்துடன், செவ்வாய்க்கிழமை (03) ஆரம்பமானது.

– எம்.நசார்



## செம்மணியில் 7 எலும்புக்கூடுகள்

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி புதைகுழியில் ஒன்றில் திங்கட்கிழமை (02) அன்று 7 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## இருவருக்கும் நிபந்தனை பிணை

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல்ல ஆகியோரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, செவ்வாய்க்கிழமை (03) அன்று உத்தரவிட்டார்.

அரசாங்கத்திற்கு 8 மில்லியனுக்கும் அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தியதாக என்ற குற்றச்சாட்டின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் தாக்கல் செய்த மூன்று வழக்குகளிலும் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 12 பிணைகளும், 50,000 ரூபாய் மதிப்புள்ள ஆறு ரொக்கப் பிணைகளும் வழங்க வேண்டும் என்று பிரதான நீதவான் உத்தரவிட்டார். அனைத்து சந்தேக நபர்களுக்கும் நீதிமன்றம் பயணத் தடை விதித்தது.

தொடர்ச்சி P2



## கிருஷாந்தி குமாரசாமி கொலை குற்றவாளிகளின் மனு தள்ளுபடி

1990களின் பிற்பகுதியில் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய கிருஷ்சாந்தி குமாரசாமி கடத்தல், பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் ஐந்து குற்றவாளிகள் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை உயர் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒருமனதாக மேல்முறையீடு செய்ய செவ்வாய்க்கிழமை (03) மறுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## “கொரோனா குறித்து PHI குற்றச்சாட்டு”

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளங் காண்பதற்கான முறையானதொரு திட்டம் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் (PHI) குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில், அங்கிருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2






# மனைவியின் தலையுடன் சரணடைந்த கணவன்

அவர் வவுனியா வடக்கு பகுதியில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் ஆரம்ப பிரிவிற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியை என்பது குறிப்பிடத்தக்கது.

கணவன் மனைவி இருவருக்கும் இடையில் நீண்ட காலமாக குடும்ப தகராறு இருந்துள்ளதுள்ளதுடன், கொலை செய்ய திட்டமிட்டிருந்த கணவன் செவ்வாய்க்கிழமை (03) காலை நொச்சிகுளம் பகுதியில் இருந்து மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் புளியங்குளம் நோக்கி சென்று அங்கு வைத்து கொலை செய்ததாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# சிவப்பு சீனி ஏற்றுமதி செய்ய பேச்சு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு பதிலளித்த அவர், சீனித் தொழிற்சாலைகளின் வருவாயை உயர்த்துவதற்கான ஒரு வழி சிவப்பு சீனியை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை என்று கூறினார்.

# பாராட்டியது அவுஸ்திரேலிய

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை பொருளாதார ரீதியில் நிலையான பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஊழல் மற்றும் மோசடியை ஒழிக்க தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ரிச்சர்ட் மார்ல்ஸை (Richard Marles) தெளிவுபடுத்தினார்.

கடந்த காலத்தில் சமுத்திரப் பாதுகாப்பு, சட்டவிரோத வர்த்தகம், ஆள் கடத்தல், பயங்கரவாதம் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய உதவிகளை இதன்போது ஜனாதிபதி பாராட்டினார்.

சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான நாடு என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு இடையிலான 70 வருட பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை நினைவுகூர்ந்த பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்படுவதே தமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் பாராட்டுவதாகவும், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், சுற்றுலா மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் ரிச்சர்ட் மார்லஸ் (Richard Marles) இங்கு தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய பிரதிப் பிரதமருடன் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், (Paul Stephens), பாதுகாப்பு திணைக்களத்தின் செயலாளர் கிரகரி லோரன்ஸ் மொரியாட்டி (Gregory Laurence Moriarty), பிரதிப் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் சைமன் எரிக் ஓ' கொணர் ( Simon Eric O'Connor), இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் (Lalita Kapur) ஆகியோரும் இதன் போது இணைந்து கொண்டிருந்ததோடு, இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்டவர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இருவருக்கும் நிபந்தனை பிணை



வழக்கில் மூன்றாவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்ட முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் நிஷாந்த பண்டார பஸ்நாயக்க, தலா 50,000 ரூபாய் மதிப்புள்ள இரண்டு ரொக்கப் பிணைகளிலும், தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள நான்கு பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார்.

# "கொரோனா குறித்து PHI குற்றச்சாட்டு"

இதேவேளை, டெங்கு, சிக்குன்குன்யா, இன்புளுவென்சா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று அபாயங்கள் குறித்து சுகாதாரத்துறை உரிய கவனம் செலுத்தி வருவதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# செம்மணியில் 7 எலும்புக்கூடுகள்

அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற குறித்த புதைகுழியில் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 14 வயது மதிக்கத்தக்க சிறுமியின் எலும்புக்கூடும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுமார் 20 வருடங்களை அண்டிய காலப் பகுதியில் உயிரிழந்தவர்களின் எலும்புக்கூடுகளே இங்கு அடையாளம் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த மனிதச் மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதனால், யாழ்ப்பாணம் - செம்மணி சித்துபாத்தி புதைகுழியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைக்க சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# கிருஷாந்தி குமாரசாமி கொலை குற்றவாளிகளின் மனு தள்ளுபடி

நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க, அச்சலா வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்தது.

முதல் குற்றவாளியான சோமரட்ண ராஜபக்ஷ உள்ளிட்ட மனுதாரர்கள், தாங்கள் பல ஆண்டுகளாக மரண தண்டனையில் இருப்பதால் நிவாரணம் கோரினர். அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படாவிட்டால், ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் அல்லது அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று அவர்கள் மனுவில் கோரியிருந்தனர்.

அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்த ஜனாதிபதி வழக்கறிஞர் மனோகர டி சில்வா, மனுதாரர்கள் தங்கள் சமர்ப்பிப்புகளில், மரண தண்டனை விதிக்கப்பட்டு நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது கொடூரமானது மற்றும் மனிதாபிமானமற்றது என்றும், இதன் மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் கூறினர்.

சிறைச்சாலை ஆணையர் நாயகம் சார்பாகவும், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் சட்டமா அதிபர் சார்பாகவும் ஆஜரான மூத்த துணை சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க, பல ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பினார். ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவது ஜனாதிபதியின் விருப்பப்படி மட்டுமே உள்ளது என்றும், எந்தவொரு குற்றவாளியும் அதை சட்டப்பூர்வ உரிமையாகவோ அல்லது உரிமையாகவோ கோர முடியாது என்பதும் சட்டமா அதிபர் எழுப்பிய முக்கிய ஆட்சேபனைகளில் ஒன்றாகும். விண்ணப்பம் காலக்கெடுவுக்கு உட்பட்டது என்றும், மனுதாரர்கள் சுத்தமான கைகளுடன் நீதிமன்றத்தை அணுகத் தவறிவிட்டனர் என்றும் சட்டமா அதிபர் வாதிட்டார்.

இந்த ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டே உயர்நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு, அடிப்படை உரிமைகள் மனுவை மறுத்துவிட்டது.

1990களின் பிற்பகுதியில் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய கிருஷாந்தி குமாரசாமி வழக்கு, ஒரு பாடசாலை மாணவி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மூவரை இராணுவத்தினர் கடத்தியது. கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தது.

1998ஆம் ஆண்டு ட்ரயல்-அட்-பார் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கி, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. அதைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வு, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளையும் உறுதி செய்து, அவர்களின் மேல்முறையீட்டையும் தள்ளுபடி செய்தது.

# இலங்கையில் மெட்ரோ பேருந்து

பொதுப் போக்குவரத்து சேவைகளை நவீனமயமாக்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாக வசதியான மற்றும் உயர் தொழில்நுட்ப பேருந்துகளின் தொகுப்பை அறிமுகப்படுத்தப்படுவதாக பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டது.

அதற்கமைய கொழும்பு, மக்கும்புர (கொட்டாவ), கடுவெல, கடவத்தை மற்றும் மொரட்டுவ உள்ளிட்ட பல பிரதான வழிகளில் இடைவழிகள் சிலவற்றின் மூலம் பயணிகள் போக்குவரத்துக்கான சொகுசான, தாழ்வான மிதிபலகை கொண்ட 100 பேருந்துகளை சேவையில் அமர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது 2007ஆம் ஆண்டு 7ஆம் எண் கொண்ட நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து வாரியத்தின் கீழ் ஒரு துணை நிறுவனத்தை நிறுவுவதற்கும், முன்மொழியப்பட்ட திட்டத்தை செயல்படுத்துவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# "மஹிந்தானந்தாவை ஏன் விசாரிக்கவில்லை"

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தொடர்பான வழக்கு தனது காலத்தில் ஏன் விசாரிக்கப்படவில்லை என்பது குறித்து நல்லாட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளிக்க வேண்டும் என்று கடுமையான மோசடி, ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம், அரச வளங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான விசாரணை மற்றும் விசாரணைக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் (PRECIFAC) முன்னாள் செயலாளர் லெசில் டி சில்வா திங்கட்கிழமை (02) அன்று தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தொடர்பான வழக்கு தனது காலத்தில் விசாரிக்கப்படாததற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூறப்பட்டுள்ளது.

பத்மன் சூரசேன, அமேந்திர செனவிரட்ன, விக்கும் களுஆராச்சி, கிஹான் குலதுங்க மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் பி.ஏ.பிரேமதிலக்க ஆகிய நான்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இதில் அடங்குவர்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பாராளுமன்ற நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய சிவில் சமூக ஆர்வலர் டி சில்வா, இந்த மோசடி நடந்த நேரத்தில் சதோசா தலைவர் அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்ததாக தெரிவித்தார்.

சதோச வழக்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரித்த நேரத்தில், நளின் பெர்னாண்டோ பாராளுமன்ற அரசியலில் நுழையவில்லை, விசாரணைகள் ஏன் வெற்றிகரமாக முடிவுக்கு வர முடியவில்லை என்பதைக் கண்டறிய அரசாங்கத்தை வலியுறுத்தினார் என்று டி சில்வா சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் நளின் பெர்னாண்டோ முதன்முதலில் SLPP டிக்கெட்டில் பாராளுமன்றத்தில் நுழைந்தார்.

அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடர்பான விசாரணைகளைத் தொடர யஹாபாலன நிர்வாகத்திற்கு அரசியல் விருப்பம் இல்லை. நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) ஏப்ரல் 2018இல் பெர்னாண்டோவைக் கைது செய்தது, ஆனால், பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

அடுத்த ஆண்டு, அக்டோபரில் பயணத் தடை விதிக்கப்பட்டது, ஆனால், டிசெம்பரில் அது நீக்கப்பட்டது. ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை மோசமாகக் கையாண்டது யஹாபாலன அரசாங்கத்தை பலவீனப்படுத்தியதாகக் கூறி டி சில்வா கூறினார்.

மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதே நேரத்தில், 53 மில்லியன் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட உயர் நீதிமன்ற விசாரணை நீதிமன்றத்தால் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சரிடம் 3 மணிநேரம் வாக்குமூலம்

முன்னாள் அமைச்சர் பியசேன கமகே வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் செவ்வாய்க்கிழமை (03) முன்னிலையாகியுள்ளார்.

இதன்போது, பியசேன கமகேவிடமிருந்து சுமார் 3 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதையடுத்து, பியசேன கமகே, வாக்குமூலம் வழங்கிய பின்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிலிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “தரவுகள் திருடப்படவில்லை”



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குறுஞ்செய்தி கட்டமைப்பு ஞாயிற்றுக்கிழமை (01) அன்று ஹேக் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, குறித்த சைபர் தாக்குதலின் போது எந்த தரவு மீறலும் ஏற்படவில்லை என்பதை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் சபையின் கூடுதல் பொது முகாமையாளர் பிரதீப் ஹேரத் கூறுகையில், ஞாயிற்றுக்கிழமை(01) மாலை, இனந்தெரியாத நபர் ஒருவர் அனுமதியின்றி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் இணையத்தளத்தில் நுழைய முயற்சித்துள்ளார். அப்போது, அந்த நபர் சபையின் குறுஞ்செய்தி சேவையில் ஊடுருவி, பயனாளர்களுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி, அந்த நபரால் சுமார் 10,000 குறுஞ்செய்திகள் பயனாளர்களின் கைபேசிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்தச் செய்திகள் மூலம், தரவுகளைப் பெறுவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துமாறு பயனாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், உடனடியாக செயல்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, குறுஞ்செய்தி சேவையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வந்து, அனைத்து பயனாளர்களுக்கும் இந்த போலி குறுஞ்செய்திகள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது தரவு முறைமையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச நிறுவன இணையத்தளங்களின் பாதுகாப்பிற்காக 24 மணி நேர செயல்பாட்டு முறையை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை கணினி அவசர பதிலளிப்பு மன்றம் செயல்பட்டு வருகிறது.

மேலும், வாடிக்கையாளர் தரவு திருடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# “ஆனையிறவு உப்புக்கு ஆபத்து இல்லை”



ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு இனிமேல் ‘ஆனையிறவு உப்பு’ என்று அழைக்கப்படும் ‘அதற்கு முதலில் சூட்டப்பட்ட ‘ரஜலுணு’ என்ற பெயரை மாற்றி ‘ஆனையிறவு உப்பு’ என்ற பெயரை சூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(02) அன்று இராமநாதன் அர்ச்சுனா எம்.பி. எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பின் பெயர் ‘ரஜ லுணு’ (அரச உப்பு) என்று குறிப்பிடப்படுகிறது. முழு சந்தை கட்டமைப்பையும் கைப்பற்றுவதற்காகவே இந்த பெயர் பயன்படுத்தப்பட்டது. அந்த வகையிலேயே ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கும் ‘ரஜ லுணு’ என்று பெயரிடப்பட்டது.

எனினும், வடக்கு மற்றும் கிழக்கு பிரதிநிதிகளின் வலியுறுத்தலுக்கு அமைய ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை ‘ஆனையிறவு உப்பு’ என்று மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஒரு தரப்பினரைத் தவறாக வழி நடத்தியுள்ளார்கள். உப்பளத்தில் நிலவும் அடிப்படை பிரச்சினைகள் குறித்து தொழிலாளர்களுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆனையிறவு உப்பு தொழிற்சாலைக்கு அரசியல் பரிந்துரைகளுடன் நியமனங்கள் வழங்கப்படவில்லை. முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, அரசியல் தலையீடு உள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனையிறவு உப்பள தொழிற்சாலையின் ஒரு சில சேவையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு ஆர்ப்பாட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தால் உப்பு உற்பத்திக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தொழிலாளர்களின் நலன்புரி திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம் என்றார்.

# பொலித்தீனுக்கு எதிராக யாழில் நடைபவனி

■ *செந்தூரப் பிரதீபன்*

இலங்கைத்தீவில் பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபவனி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக ஸேப் லைப் (SAFE LIFE) அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சுதர்சிகா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“பொலித்தீன் பாவனையால் இன்றைய மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள் என அத்தனை உயிரினங்களின் வாழ்வியலும் கேள்விக்குறியாகியுள்ளது.

குறிப்பாக ஒரு நாள் பாவனை பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்டவற்றை மக்கள் பாவனையில் இருந்து இல்லாதொழிப்பது அவசியமாகும். ஆபத்து என்று தெரிந்தும் பாவனையாளர்கள் அந்த பாவனையில் இருந்து விடுபடுவதாகத் தெரியவில்லை.

சில பொலித்தீன்கள் ஒன்று மண்ணுள் புதையும் போது, அது உக்கலடைய 1,000 ஆண்டுகள் செல்கின்றன. இதனால் பல்வேறு தாக்கங்களை உயிரினங்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

அந்த வகையில், பொலித்தீன்களால் ஏற்படும் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

அதனடிப்படையில், நாம் முன்னெடுக்கும் நிகழ்ச்சித்திட்டமானது எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். பொது நூலக பின் நுழைவாயிலில் ஆரம்பிக்கப்பட்டு நூலகத்தின் பிரதான நுழைவாயில் வரை நடைபவனி நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்கள் பொது நல விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டு, நிகழ்வை வலுப்படுத்தி விழிப்புணர்வின் நோக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல ஒத்துழைக்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.


wijeyanewspapers helping shape opinions | IEPSL Institute of Environmental Professionals Sri Lanka | TSHE TIMES SCHOOL OF HIGHER EDUCATION Towards a Bright Future A WIJEYA NEWSPAPERS LTD GROUP COMPANY

நாடுதழுவிய ரீதியிலான கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டி

உலக சுற்றுச்சூழல் தினம் 2025

தொனிப்பொருள் – “பிளாஸ்டிக் மாசுபாட்டை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்”

ஜூன் 5 ஆம் திகதி வரும் உலக சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் வகையில், விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், இலங்கை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் நிறுவனம் (IEPSL) மற்றும் TIMES UNIVERSITY ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும் நாடுதழுவிய ரீதியில், கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டியில் பங்கேற்க பின்வரும் வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களை அழைக்கிறது.

போட்டி வகைகள்

| வகை | வயது | வகை |
|---|---|---|
| A | வயது 6–10 | சுவரொட்டி |
| B | வயது 11–15 | சுவரொட்டி |
| C | வயது 11–15 | கட்டுரை |
| D | வயது 16–19 | கட்டுரை |

சுவரொட்டி அளவுகோல்கள்

- அளவு A3, கையால் வரையப்பட்ட வரைபடங்கள் மட்டும் (டிஜிட்டல் வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது)
- ஊடகம் - வெளிர் வண்ணம், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம்
- சுவரொட்டியின் அசல் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

கட்டுரை அளவுகோல்கள்

சொற்கள் வரம்பு
C வகை : 250–300 சொற்கள்
D வகை : 400–600 சொற்கள்

கட்டுரை எழுதும் முறை
- கையால் எழுதப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- மொழி சிங்களம், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிகளில்

சமர்ப்பிப்பு விவரங்கள்

உங்கள் படைப்புகளை அஞ்சல் மூலமாகவோ அல்லது கீழே உள்ள முகவரிக்கு நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.
**விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், இல. 36, 4வது மாடி, ஹைட் பார்க் கோணர், கொழும்பு –02**

கட்டுரைகள்: உங்கள் கட்டுரைகளின் மென் பிரதிகளை மட்டும்
மின்னஞ்சல் : brands@wijeya.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
மின்னஞ்சல் அனுப்பும்போது: WED 2025_Essay Competition 60 என பொருள் வரியில் குறிப்பிடவும்.
தொடர்புகளுக்கு: 0743946392

**உங்கள் படைப்புகளை சமர்ப்பிக்கும் போது பின்வரும் விவரங்களைச் சேர்க்கவும்:**

- முழு பெயர்:
- வயது
- பாடசாலை:
- பெற்றோர்/ பாதுகாவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் .

வெற்றியாளர்களுக்கு மதிப்புமிக்க பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இறுதி திகதி: 2025 ஜூன் 10

சுற்றுச்சூழலுக்காக குரல் எழுப்பும் இந்த வாய்ப்பை தவற விடாதீர்கள்.
விஜயா நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், இலங்கை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் சங்கம் (IEPSL) மற்றும் TIMES UNIVERSITY ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

EXCLUSIVE GIFT PARTNER
SUPERIOR Designed for Brilliance | STAR A Komar company | Talawakelle Tea Estates®

# போதைப்பொருள் சொர்க்கத்திற்கு பலியாகிவிடும் அபாயம்

ஒவ்வொருநாளும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டாலும், வெளிநாடுகளில் இருந்து போதைப்பொருட்களைக் கொண்டு வருவோரும், உள்நாட்டில் போதைப்பொருள்களை விற்பனை செய்வோரும் அதனைக் கைவிடுவதாக இல்லை என்பது பொலிஸ் ஊடக அறிக்கையில் இருந்து உறுதியாகின்றது.

இலங்கை இப்போது மது அருந்துவது மட்டுமல்லாமல், கஞ்சா, போதைப்பொருள் மற்றும் ஆபத்தான போதைப்பொருட்களும் அதிகமாக இருக்கும் நாடாக மாறி விட்டது. மாலபேயில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு முன்பாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 480 மில்லிகிராம் கொக்கேன், 71 கிராம் குஷ், 850 மில்லிகிராம் மெத்தம்பேட்டமைன் மற்றும் 50 கிராம் ஹஷிஷ் ஆகியவை மீட்கப்பட்டதாக வலான ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க பாடுபடுகிறது என்பது உண்மைதான். இப்போது பாதாள உலகமும் போதைப்பொருள் கடத்தலும் இணைந்து செய்யும் ஒரு கடத்தல் உள்ளது. இதை ஒரே இரவில் முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்றாலும், எதிர்கால சந்ததியினருக்காகப் பாதாள உலகத்தையும் போதைப்பொருள் கடத்தலையும் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆபத்தான போதைப்பொருள் தேசிய ஆணையத்தால் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வில், நகர்ப்புறங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலை குழந்தைகள் போதைப்பொருள் கடத்தலுக்குப் பலியாகிவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

"போதைப்பொருள் இல்லாத நாட்டை" உருவாக்குவது அவர்களின் அரசியல் கொள்கை என்று தங்கள் கொள்கை அறிக்கையில் கூறியவர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நாட்டில் போதைப்பொருள் கடத்தல் பெரிய அளவில் பரவுவதற்குப் பங்களித்தனர் என்பது சமீபத்தில் தெரியவந்தது.

இதற்குப் பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் பலியாகியுள்ளனர். இந்த நாட்டில் ஒரு கடுமையான சமூகப் பிரச்சினையாக இருக்கும் போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பது மிகவும் முக்கியமான விடயம்.

முதலாவதாக, அரசு நல்லெண்ணத்துடன் தலையீடு செய்யப்பட வேண்டும். பாதுகாப்புப் படையினருக்கும் இதற்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும். சட்டங்களை உருவாக்கும் செயல்பாட்டில் அதற்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும், மேலும் பரவல் மற்றும் பிரசாரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

இது ஒரு குறிப்பிட்ட நீண்டகால திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், புதிய சட்டங்களும் இயற்றப்பட வேண்டும். இது சமூக மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரலின் உச்சத்தில் இருக்க வேண்டிய ஒரு விஷயம்.

நாட்டில் போதைப்பொருள் கடத்தல் பரவுவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவிய அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் மற்றும் சக்திவாய்ந்த சமூகத்தை அம்பலப்படுத்த வேண்டும். அவர்கள் யார் என்பதை ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்த வேண்டும். மேலும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் நாம் தாமதப்படுத்தும் ஒவ்வொரு கணமும், இலங்கை போதைப்பொருள் சொர்க்கத்திற்குப் பலியாகிவிடும். பின்னர் அது பாதாள உலகத்தாலும் போதைப்பொருள் கடத்தல்காரர்களாலும் நடத்தப்படும். நாடு இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான விதியில் சிக்குவதைத் தடுப்பது நம் அனைவரின் சமூகப் பொறுப்பாகும்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஊழலுக்கு வழிவகுக்கும் கலப்புத் தேர்தல் முறை

எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் ஏதாவது ஒரு கட்சி அருதிப் பெரும்பான்மையைப் பெற்ற 161 உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள் மற்றும் பிரதி தவிசாளர்கள் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மே மாதம் நடைபெறும் தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஜூன் மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபேரத்ன விசேட வர்த்தமானி ஒன்றின் மூலம் அறிவித்திருந்தார். அதற்கு இணங்கவே நேற்று (02) 161 சபைகளின் பிரதான பதவிகளைப் பெற்றவர்கள் சத்தியப் பிரமானம் செய்து கொண்டனர்.

நாட்டில் மொதம் 341 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அவற்றில் எல்பிட்டிய பிரதேச சபைக்கு கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலின் முடிவுகளின்படி, தேசிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளைப் பார்க்கிலும் கூடுதலான ஆசனங்களை (15 ஆசனங்களை) பெற்ற போதிலுத் ஏனைய சகல கட்சிகளினதும் மொத்த ஆசன எண்ணிக்கையும் 15 ஆக இருக்கிறது.

அங்கு தேசிய மக்கள் சக்திக்கு அருதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும், அக்கட்சி இது வரை பிரச்சினை ஏதுவுமின்றி அப்பிரதேச சபையை நிர்வகித்து வருகிறது. மற்றொரு உள்ளூராட்சி மன்றமான கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் சட்டப் பிரச்சினையொன்றின் காரணமாக நடைபெறவில்லை. அதன் பிரகாரமே கடந்த 6ஆம் திகதி 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெற்றன.

அவற்றில் நேற்று முன்தினம் (01) மேயர்கள் மற்றும் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டு முறைப்படி நிறுவப்பட்ட 161 சபைகள் தவிர்ந்த ஏனைய 178 சபைகளின் தவிசாளர்கள் மற்றும் மேயர்களை அச்சபைகளைக் கூட்டி அவற்றில் நடத்தப்படும் தேர்தல் மூலம் தெரிவு செய்ய அந்தந்த பிரதேச உதவி தேர்தல் ஆணையாளர்கள் பின்னர் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். ஏனெனில், அச்சபைகளில் எந்தவொரு கட்சியும் அருதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை.

2012ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைக் கலப்பு தேர்தல் முறையில் நடத்துவதற்கான சட்ட திருத்தம் அறிமுகப்படுத்தப்படுதற்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களில் இவ்வாறான குழப்ப நிலை ஏற்படவில்லை. அக்காலத்தில் தேர்தல்களை அடுத்து, எப்போதும் எந்தவொரு சபையிலும் ஏதாவது ஒரு கட்சி அருதிப் பெரும்பான்மையைப் பெற்றது. இம்முறை தேர்தல் நடைபெற்ற சபைகளில் அறைவாசிக்கு மேற்பட்ட சபைகளில் (178 சபைகளில்) எந்தவொரு கட்சியும் அருதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை.

அக்காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் விகிதாசார முறையிலேயே நடைபெற்றன. அத்தேர்தல்களின் போது, ஆசன அடிப்படையில் முதலாம் இடத்துக்க வரும் கட்சிக்கும் இரண்டாம் இடத்துக்கு வரும் கட்சிக்கும் இடையே இடைவெளியை அதிகரிப்பதற்காக இரண்டு உத்திகள் கையாளப்பட்டன. முதலாம் இடத்துக்கு வரும் கட்சிக்கு மேலதிகமாக இரண்டு ஆசனங்களை (போனஸ் ஆசனங்களை) வழங்குவது ஒரு உத்தியாகும். தற்போது அமுலில் உள்ள விகிதாசார பாராளுமன்ற தேர்தலின்போதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாம் இடத்துக்குவரும் கட்சிக்கு ஒரு போனஸ் ஆசனம் வழங்கப்படுகிறது.

இதன் மூலம் ஏறத்தாழ சமமாக வாக்குகளைப் பெற்றாலும் முதலிடத்துக்கு வரும் கட்சி இரண்டாம் இடத்துக்கு வரும் கட்சியைப் பார்க்கிலும் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும். இது விகிதாசார முறையின் அடிப்படை நோக்கத்துக்கு முரணாக அமைந்தாலும் சபைகளில் அல்லது பாராளுமன்றத்தில் குழப்பநிலை ஏற்படுவதை அது தடுக்கிறது. இந்த போனஸ் ஆசனங்களை வழங்கும் முறை உள்ளூராட்சி மன்றங்களுக்கான கலப்பு தேர்தல் முறையில் இல்லை.

அதேவேளை, அக்காலத்தில் நேரடியாக ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு வாக்குகளைப் பெறாத மிகச் சிறிய கட்சிகளை ஆசன பகிர்வின்போது, ஒதுக்கி விடுவதங்காக வெட்டுப்புள்ளி முறை அமுலில் இருந்தது. இப்போது பாராளுமன்றத் தேர்தலிலும் இம்முறை அமுலாகிறது. அந்த வெட்டுப் புள்ளியும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான கலப்பு தேர்தல் முறையில் இல்லை.

ஆரம்ப காலத்தில் இந்த வெட்டுப் புள்ளியானது, செல்லுபடியாகும் மொத்த வாக்குகளில் 12 வீதமாக இருந்தது. 1988ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவிடம் விடுத்த கோர்கையின் அடிப்படையில் அது 5 வீதமாகக் குறைக்கப்பட்டது.

கலப்பு தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்படுவதோடு, இந்த வெட்டுப் புள்ளி இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக மிகச் சிறிய கட்சிகளும் ஆசனங்களை பெரும் நிலை ஏறப்பட்டது. இதனால் ஒரு கட்சி ஒரு சபையில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றாலும் சிறு சிறு கட்சிகள் பெறும் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை அதை விட அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

இந்நிலையில், தேர்தலில் முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களை அடையும் கட்சிகள் உள்ளூராட்சி மன்றத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சிறிய கட்சிகளை அணுகும். சிறிய கட்சிகள் பல நிபந்தனைகளை விதிக்கும் இது ஊழலுக்கே வழிவகுக்கும்.

இதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையை மீளாய்வு செய்வதற்காக 2021ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவொன்றும் அதே ஆண்டு தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறு போனஸ் ஆசன முறையும் வெட்டுப் புள்ளியும் இரத்தச் செய்யப்பட்டதன் காரணமாக இம்முறை 178 சபைகளில் நிலையற்றத்தன்மை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய கலப்புத் தேர்தல் முறையில் மற்றொரு பிரச்சினை என்னவென்றால், முன்னைய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களில் இருந்ததைப் பார்க்கிலும் உறுப்பினர் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்தமையாகும். கலப்பு முறையின் கீழ் விகிதாசார முறைப்படியும் தொகுதி வாரி முறைப்படியும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தீர்ப்பதற்கு தொகுதி வாரி மற்றும் விகிதாசார ஆகிய இரு முறைகளிலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் குறைக்க வேண்டும். தொகுதிவாரி முறையில் தெரிவாகும் உறுப்பினர்களை குறைத்தால் அதற்கமைய விகிதாசார முறையில் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தாமாகக் குறையும். தொகுதிவாரி முறையில் தெரிவாகும் உறுப்பினர்களைக் குறைக்கப் புதிதாக உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அதற்காகப் புதிதாகத் தொகுதி எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்.

2023ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைப் பிரகாரம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையிலான எல்லை நிர்ணய ஆணைக்குழு நாடு முழுவதிலும் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் 8,350 ஆக இருந்த தொகுதிகளின் எண்ணிக்கையை 4,714 ஆக குறைத்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது.


இம்முறை மிக இலகுவாக அவ்வறிக்கையின்படி, உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துத் தேர்தலை நடத்தியிருக்கலாம். ஆயினும், வீண் விரயத்தைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அதனை செய்யவில்லை. ஏனைய எந்தவொரு கட்சியும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவும் இல்லை.

கலப்புத் தேர்தல் முறையின் கீழ் முதலில் தொகுதி அடிப்படையில் தேர்தல் நடைபெறும். வாக்காளர்கள் தத்தமது தொகுதிகளில் போட்டியிடும் கட்சிகளில் தாம் விரும்பும் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களிப்பர். அதன்படி, தொகுதி வாரியாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் யார் என்பது தெரிய வரும்.

குறிப்பிட்டதோர் உள்ளூராட்சி மன்றத்துக்குத் தொகுதி வாரியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், அந்த மன்றத்தின் எல்லைக்குள் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் அந்தந்த அரசியல் கட்சி பெற்ற வாக்குகளின் விகிதாசாரப்படி, அக்கட்சிகளுக்கான மோத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். குறிப்பிட்டதோர் கட்சி தமக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடக் குறைவாகத் தொகுதி வாரியாக பெற்றிருந்தால் அக்கட்சியின் தலைவர் தமக்கு கட்சிக்குரிய மிகுதி உறுப்பினர்களை தமது விருப்பத்தின் படி நியமிக்க முடியும்.

இவ்வாறு கட்சித் தலைவர் உறுப்பினர்களை நியமிக்க முற்படும்போது, தான் உட்கட்சி சண்டை மூளுகிறது. அது கலப்புத் தேர்தல் முறையில் காணப்படும் மற்றொரு பிரச்சினையாகும். அண்மையில் இந்தப் பிரச்சினையால் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச அமைப்பாளர்கள் பலர் அவ்வமைப்பாளர் பதவிகளை இராஜினாமா செய்தனர்.

கலப்புத் தேர்தல் முறையின் கீழ் முதலாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற்றது. அப்போதும், அத்தேர்தல் முறையின் இக்குறைபாடுகள் காணப்பட்டன. ஆனால், அவற்றை நீக்கும் வகையில் உரிய சட்டத்தைத் திருத்த எந்தவொரு அரசாங்கமும் கடந்த ஏழு ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கவில்லை. 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்த போதிலும், தமது கட்சி தோல்வியடையும் என்ற பயத்தால் தேர்தலை ஒத்திப்போடுவதற்காகவே அவர் அந்த நடவடிக்கையை எடுத்தார்.



## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே, போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு என சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### நீரில் அடித்து சென்ற வீதி

மதுரங்குளி, தொடுவா வீதியின் போக்குவரத்திற்காக டச்சுப் பாலத்திற்கு அருகில் மதுரங்குளி வர்த்தக சங்கம் உள்ளிட்ட ஏனைய சங்கங்கள், தனவந்தர்களின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதை கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக குறித்த தற்காலிக வீதி நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அந்த விதியுடனான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, மதுரங்குளி மல்லம்பிட்டி பாலமும் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த பாலத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சேதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு வரும் இரண்டு பாலங்களுக்கும் இடையில் தற்காலிக வீதிகள் அமைக்கப்பட்டு, அதனூடாக கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் கனரக வாகனங்கள் பயணித்தமையே அந்த வீதிகள் சேதமடைவதற்கு காரணமாகும் என மக்களும், வாகன சாரதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ரஸீன் ரஸ்மின்














# புனித அந்தோனியார் திருத்தல கொடியேற்றம்

கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழா, கொடியேற்றத்துடன், செவ்வாய்க்கிழமை (03) அன்று ஆரம்பமானது.

மும்மொழிகளிலும், காலை 6 மணிக்கு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது. எதிர்வரும் 11ஆம் திகதி வரையிலும் மாலை 6 மணிக்கு நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

12ஆம் திகதி இரவு 7 மணிக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் விசேட நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

13ஆம் திகதி திருவிழா நடைபெறும். அன்றைய தினம் அதிகாலை 4 மணிக்கு தமிழ் மொழியிலும் காலை 5 மணிக்கு சிங்களமொழியிலும் மீண்டும் 6 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

எம்.நசார்



















நைஜீரியா

## நைஜீரியாவில் அடைமழை:

# 700 பேர் பலி



நைஜீரியாவில் அடைமழை, வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 700ஆக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாட்களாக நைஜீரியா நாட்டின் வடக்கு மத்திய பகுதியில் நைஜர் மாகாணத்திற்கு உட்பட்ட மொக்வா நகரில் அடைமழை பெய்து வருகிறது. இதனால், நகர் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது.

வெள்ளத்திலிருந்து தப்பிக்க, பல்லாயிரக்கணக்கானோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

தொடர் மழையால், பொதுமக்களின் இடுப்பு வரை வெள்ளநீர் சூழ்ந்து காணப்படுகிறது. வெள்ளம் அதிகரித்து 500க்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால், மக்களை மீட்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. 2 வீதிகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு உள்ளன. 2 பாலங்கள் உடைந்துள்ளன.

இந்நிலையில், வெள்ளத்தில் சிக்கிப் பலியானவர்களின் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது. பலர் காயமடைந்து உள்ளனர்.

500க்கும் மேற்பட்டோரை காணவில்லை. இதுபற்றி உள்ளூர் அதிகாரி மூசா கிம்போகு செய்தியாளர்களிடம் கூறும்போது, மீட்பு முயற்சிகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஏனெனில் யாரும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை என கூறினார். இதனால், மொத்தத்தில் 700 பேர் பலியாகி உள்ளனர் என அஞ்சப்படுகிறது.

இந்த பகுதியில், 60 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெள்ளம் ஏற்பட்டு நிலைமையை மோசமடைய செய்துள்ளது. அணை ஒன்று உடைந்து வெள்ள நீர் வெளியேறி வருகிறது என கூறப்படுகிறது. எனினும், அதிகாரிகள் இதனை உறுதி செய்யவில்லை.

நைஜீரியாவில், 2022ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில், 600க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

13 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். ஆண்டுதோறும் இதுபோன்ற தொடர் அடைமழை மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் மக்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருகிறது.

இத்தாலி



## எரிமலை வெடிப்பு:

# ஓட்டமெடுத்த சுற்றுலாப் பயணிகள்

எரிமலை கற்கள் வெடித்துச் சிதறியதில், சுற்றுலாப் பயணிகள் அலறியடித்து ஓடிய சம்பவமொன்று, இத்தாலியில் பதிவாகியுள்ளது.

இத்தாலியின் சிசிலி தீவில் எட்னா என்ற எரிமலை உள்ளது. ஐரோப்பாவில் மிகவும் செயல்பாட்டில் உள்ள எரிமலை இதுவாகும். இந்த எரிமலை உள்ள பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர். மேலும், இந்த எரிமலை சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் எரிமலையைச் சுற்றிப்பார்க்க வருகின்றனர்.

இந்நிலையில், எட்னா எரிமலை திங்கட்கிழமை (2) திடீரென வெடித்தது. கரும்புகையுடன், எரிமலை கற்கள் வெடித்துச் சிதறி லாவா குழம்பு வெளியேறி வருகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த சுற்றுலாப் பயணிகள் எரிமலையிலிருந்து அலறியடித்து ஓடினர்.

எரிமலை வெடிப்பால் சிசிலி தீவிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வெளியேறி வருகின்றனர். அதேவேளை, எரிமலை வெடிப்பு வழக்கமான ஒன்றுதான் என்றும் மிகப்பெரிய அச்சுறுத்தல் இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிமலையைச் சுற்றியுள்ள மக்கள் யாரும் இதுவரை வெளியேற்றப்படவில்லை. எரிமலை வெடிப்பால் உயிரிழப்பு உள்ளிட்ட பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான்



## சிந்து நதி நீர் நிறுத்தம்:

# நீர் பஞ்சத்தில் பாகிஸ்தான்

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா நிறுத்தி வைத்ததால், பாகிஸ்தான் கடுமையான சிரமங்களை எதிர்கொள்கிறது.

பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் 2, 2024 உடன் ஒப்பிடும்போது, ஜூன் 2, 2025 நிலவரப்படி, சிந்து நதி நீர் அமைப்பில் (பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திற்குள்) கிடைக்கும் நீரின் சதவீதம் 10.3 சதவீதம் குறைந்துள்ளது.

தென்மேற்கு பருவமழை வருவதற்கு இன்னும் நான்கு வாரங்கள் இருப்பதால், வரும் நாட்களில் நிலைமை மோசமடைய வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில், சிந்து நதி நீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்தும் சிந்து நதி அமைப்பு ஆணையம் (IRSA), இந்த ஆண்டு ஜூன் 2ஆம் திகதி நிலவரப்படி பஞ்சாப் மாகாணத்தில் 1,28,800 கன அடி தண்ணீர் கிடைத்துள்ளதாகவும், இது கடந்த ஆண்டு இதே திகதியில் இருந்த நீர் சேமிப்பை விட 14,888 கன அடி குறைவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று அது தெரிவித்துள்ளது. தற்போது நடைபெற்று வரும் காரீப் பயிர் விதைப்பு பருவம், தென்மேற்கு பருவமழை ஜூலை இறுதி வரை பஞ்சாப் மாகாணத்தை அடைய வாய்ப்பில்லை. மேலும் கடுமையான வெப்ப அலைகள் ஆகியவற்றால் விவசாயத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் ஆணையம் கூறியுள்ளது.

இந்த கோடையில் நாட்டின் மொத்த நீர் ஓட்டத்தில் 21 சதவீத பற்றாக்குறையையும், இரண்டு முக்கிய அணைகளில் சுமார் 50 சதவீத நீர் இருப்பு பற்றாக்குறையையும் எதிர்கொள்வதாகப் பாகிஸ்தான் கடந்த மாதம் கூறியது. அணை அதிகாரிகள் மற்றும் நீர்ப்பாசன விநியோக கண்காணிப்பு நிறுவனங்கள் நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீரை நியாயமான முறையில் பயன்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

இந்தியா

## கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில்

# உச்சத்தை தொட்ட கேரளா

இந்தியாவில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, தற்போது 4,000ஐ நெருங்கிவிட்டது.

திங்கட்கிழமை (2) நிலவரப்படி, நாட்டில் 3, 961 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

நாட்டில் கேரளாவில் அதிகபட்ச தொற்று உள்ளது. அங்கு 1435 பேர் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருவதாக மத்திய அரசின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து மகாராஷ்டிர மாநிலத்தில் 506 பேர் சிகிச்சை பெறுகிறார்கள். இதன் தொடர்ச்சியாக டெல்லியில் 483 பேரும், குஜராத்தில் 338 பேரும், கர்நாடகத்தில் 253 பேரும், தமிழ்நாட்டில் 189 பேரும் சிகிச்சையில் உள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் 157 பேர் சிகிச்சை பெறுகிறார்கள். புதுச்சேரியில் 7 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் முந்தைய தினத்தைவிடத் திங்கட்கிழமை (2) பாதிப்பின் எண்ணிக்கை குறைந்துள்ளது.



தற்போதைய கொரோனா பரவலில் உயிர்ப்பலி எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளது.



## பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர்:

# புத்தளம் பிரதேச செயலகம் சம்பியன்

■ எம்.யூ.எம். சனூன்

தேசிய விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு நடைபெற்ற புத்தள மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் பிரதேச செயலக அணி சம்பியனானது.

மாராவில சென். செபஸ்தியன் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் வென்னப்புவ பிரதேச செயலக அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே புத்தளம் பிரதேச செயலக அணி சம்பியனானது.

புத்தளம் பிரதேச செயலகம், வென்னப்புவ பிரதேச செயலகம் தவிர சிலாபம், நாத்தாண்டிய, தங்கொட்டுவ, கல்பிட்டி பிரதேச செயலகங்களும் இத்தொடரில் பங்கேற்றன.

சம்பியனானனதன் மூலம் புத்தளம் பிரதேச செயலக அணியானது அடுத்து வரும் அகில இலங்கை ரீதியிலான மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் பங்கேற்பதற்கு தகுதி பெற்றுள்ளது.

புத்தளம் பிரதேச செயலக அணியை புத்தளம் விளையாட்டு அதிகாரி சுமித் வழி நடத்தி இருந்தார்.

## மேற்கிந்தியத் தீவுகள் குழாமில்

# பூரான் இல்லை


இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் நிக்கலஸ் பூரான் இடம்பெறவில்லை.

தனக்கு ஓய்வளிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இக்குழாமில் பூரான் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இதேவேளை ஜேஸன் ஹோல்டர், அன்ட்ரே ரஸல் ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளார்கள்.

குழாம்: ஷே ஹோப் (அணித்தலைவர்), ஜோன்சன் சார்ள்ஸ், றொஸ்டன் சேஸ், மத்தியோ போர்டே, ஷிம்ரோன் ஹெட்மயர், ஜேஸன் ஹோல்டர், அகீல் ஹொஸைன், அல்ஸாரி ஜோசப், பிரெண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோட்டி, றொவ்மன் பவல், அன்ட்ரே ரஸல், ஷெர்ஃபேன் ருதஃபோர்ட், றொமாரியோ ஷெப்பர்ட்.





## கழக உலகக் கிண்ணத்திலிருந்து

# கொவாசிச் விலகல்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரர் மட்டியோ கொவாசிச் தவறவிடவுள்ளதாக அக்கழகம் தெரிவித்துள்ளது.

குதிக்கால் தசைநார் காயத்திலிருந்து குணமடையும் பொருட்டு சத்திர சிகிச்சை மேற்கொண்டமையையடுத்தே இவ்வாறு தொடரை 31 வயதான கொவாசிச் தவறவிடவுள்ளார்.

# கிளாசென் ஓய்வு

அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தென்னாபிரிக்காவின் ஹெய்ன்றிச் கிளாசென் ஓய்வு பெற்றுள்ளார்.

இதுவரையில் 60 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 43.69 என்ற சராசரியில் அதிரடியாக 2,141 ஓட்டங்களைப் பெற்ற 33 வயதான கிளாசென், 58 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 100 பந்துகளில் 141.84 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 1,000 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். தவிர நான்கு டெஸ்ட்களிலும் கிளாசென் விளையாடி இருந்தார்.




## இந்திய ஏ எதிர் இங்கிலாந்து லயன்ஸ்

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த போட்டி

இந்திய ஏ அணிக்கும், இங்கிலாந்து லயன்ஸ் அணிக்குமிடையே கன்டபெரியில் வெள்ளிக்கிழமை(30) ஆரம்பித்து திங்கட்கிழமை(02) முடிவுக்கு வந்த முதலாவது உத்தியோகபூர்வற்ற டெஸ்ட் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: லயன்ஸ்

ஏ: 557/10 (துடுப்பாட்டம்: கருண் நாயர் 204, துருவ் ஜுரேல் 94, சஃப்ராஸ் கான் 92, ஹர்ஷ் டுபே 32, ஷர்துல் தாக்கூர் 27, அன்ஷுல் கம்போஜ் 23 ஓட்டங்கள்.
பந்துவீச்சு: ஜொஷ் ஹல் 3/72,



ஸமன் அக்தர் 3/73, எடி ஜக் 2/75, அஜீட் சிங் டேல் 1/99, றெஹான் அஹ்மட் 1/144)

லயன்ஸ்: 587/10 (டொம் ஹெய்ன்ஸ் 171, டான் மௌஸ்லி 113, மக்ஸ் ஹொல்டன் 101, எமிலியோ கே 46, ஸமன் அக்தர் 41, அஜீட் சிங் டேல் 27, எடி ஜக் 25 ஓட்டங்கள்.
பந்துவீச்சு: முகேஷ் குமார் 3/92, ஷர்துல் தாக்கூர் 2/105, கருண் நாயர் 1/5, நித்சிஹ் குமார் ரெட்டி 1/63, அன்ஷுல் கம்போஜ் 1/69, ஹர்ஷித் ராணா 1/99, ஹர்ஷ் டுபே 1/129)

ஏ: 241/2 (துடுப்பாட்டம்: அபிமன்யூ ஈஸ்வரன் 68, யஷஸ்வி ஜைஸ்வால் 64, துருவ் ஜுரேல் ஆ.இ 53, நிதிஷ் குமார் ரெட்டி ஆ.இ 52 ஓட்டங்கள்.
பந்துவீச்சு: றெஹான் அஹ்மட் 2/41).

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 04, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.